டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 157 1.12.2025 MONDAY KARTHIGAI : 14 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 157 1.12.2025 திங்கள்கிழமை கார்த்திகை : 14 விலை : ரூ.5/-

3 புதுச்சேரி: சிவப்பு ரேஷன் கார்டுக்கு ரூ.10,000 மழை நிவாரணம் வழங்க அதிமுக வலியுறுத்தல்

4 துண்டை மாற்றியதால், அவர் கருத்து மாறிப்போச்சு: செங்கோட்டையன் குறித்து கோபிசெட்டிபாளையத்தில் இபிஎஸ் விமர்சனம்

2 'காசாவில் இடிந்த கட்டிடங்களில் 10,000+ உடல்கள்...' உலுக்கும் மீட்பு அனுபவம்

# "சிந்தனை மாற்றமே தேவை" : ஆளுநர் மாளிகை பெயர் மாற்றம் குறித்து முதல்வர் ஸ்டாலின் கருத்து!

சென்னை: டிச.1-

"பெயர் மாற்றத்தைவிட சிந்தனை மாற்றமே தேவை" என ஆளுநர் மாளிகைகள் பெயர் மாற்றம் குறித்து முதல்வர் ஸ்டாலின் கருத்து தெரிவித்துள்ளார்.

மாநிலங்களில் உள்ள ராஜ் பவன்கள் இனி லோக் பவன் (மக்கள் பவன்) என்று அழைக்கப்படும் என மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது. அதாவது, 2024 ஆளுநர்கள் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று இந்த அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "சட்டமன்றம் = மக்கள் மன்றம்! சட்டமன்றத்தை மதிக்காதவர்கள், 'மக்கள் மாளிகை' எனப் பெயர் மாற்றுவது கண் துடைப்பா? மக்களாட்சித் தத்துவத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதற்கா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளையும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற இறையாண்மையுள்ள சட்டமன்றத்தையும் மதிப்பதுதான் இப்போதைய தேவை. சிந்தனையிலும் செயலிலும் மாற்றம் இல்லையெனில், இதுவும் தேவையற்றதே" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





ஆத்தூர் தொகுதி குட்டத்துப்பட்டி ஊராட்சி மைலாப்பூரில் 73 லட்சம் மதிப்பில்

## சிமெண்ட் சாலை மற்றும் காம்பவுண்டு சுவர் கட்டிக்கொடுத்த அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள் பாராட்டு

சின்னாளபட்டி, டிச.1-

ஆத்தூர் தொகுதி குட்டத்துப்பட்டி ஊராட்சி மைலாப்பூரில் 73 லட்சம் மதிப்பில் சிமிண்ட் சாலை மற்றும் காம்பவுண்டு சுவர் கட்டிக்கொடுத்த ஊரக வளர்ச்சித்;துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள் மனதார பாராட்டி நன்றி தெரிவித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் தார் சாலைகள் அமைத்துக் கொடுத்துள்ளார். இதுதவிர கிராமப் புறங்களில் உள்ள வீதிகளுக்கு வடிகால் வசதியுடன் சிமெண்ட சாலைகள் அமைத்துக் கொடுத்து வருவதற்கு கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை பாராட்டி வருகின்றனர்.

குட்டத்துப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட மைலாப்பூர், சவரியார் சிலுவைத் திண்ணை தெரு, சந்தியாகப்பர் சிலுவைத் திண்ணைத்தெரு, அருளப்பர் சிலுவைத் திண்ணைத்தெரு பகுதி மக்கள் தங்கள் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்ததுடன் அருகில் உள்ள மயானத்திற்கு காம்பவுண்ட் சுவர் கட்டிக்கொடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத். தனர். மைலாப்பூர் கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சுமார் 73 லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலை மற்றும் காம்பவுண்ட் சுவர் கட்டிக்கொடுத்துள்ளார். இதற்கு கிராம மக்கள் மத்தியில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

தங்கள் பகுதிக்கு சிமெண்ட் சாலைகள் அமைத்துக் கொடுத்தது குறித்து மைலாப்பூரைச் சேர்ந்த மரியசாந்தி (28) கூறுகையில் கோரிக்கை மனு கொடுத்தவுடன் அமைச்சர் ஐ.பெரியசாமி ஐயா அவர்கள், ரூ. 73 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உடனடியான எங்கள் பகுதிக்கு சிமெண்ட சாலை அமைத்துக் கொடுத்துள்ளார். இது போல அருகில் உள்ள மயானத்திற்கும் காம்பவுண்ட் சுவர் வசதி செய்துகொடுத்துள்ளார். அவருக்கு நாங்கள் என்றும் நன்றியுடன் இருப்போம் என்றார். அதே பகுதியைச் சேர்ந்த எஸ்.தோமையார் (75) கடந்த 33 வருடங்களாக தொகுதி மக்களுடன் மக்களாக இருந்துவரும் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்கள் எங்கள் பகுதிக்கு சிமெண்ட் சாலை வசதி செய்து கொடுத்துள்ளார். இதுபோல 4 தெருக்களை இணைக்கும் தென்வடல் வீதியில் தார்ச்சாலை வசதியோ அல்லது பேவர்பிளாக் கற்கள் சாலை வசதியோ செய்து கொடுத்தால் மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள் என்றார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## சின்னாளபட்டியில் ஆதார் திருத்தப் பணிக்காக தபால் நிலையத்தில் மணிக்கணக்கில் காத்துக்கிடக்கும் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள்

பள்ளிகளில் ஆதார் திருத்தம் முகாம் நடத்த வேண்டும் பள்ளி மாணவர்களின் கோரிக்கை

20 நாட்களுக்கு முன்பு பதிவு செய்தவர்களுக்குத்தான் ஆதார் திருத்தம் செய்வதாக பள்ளி மாணவர்கள் புகார்

சின்னாளபட்டி, டிச.1-

சின்னாளபட்டியில் ஆதார் திருத்தப் பணிக்காக தபால் நிலையத்தில் மணிக்கணக்கில் காத்துக்கிடக்கும் பொதுமக்கள்இ பள்ளி மாணவர்கள் பள்ளிகளில் ஆதார் திருத்தம் முகாம் நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். 20 நாட்களுக்கு முன்பு பதிவு செய்தவர்களுக்குத்தான் தபாலர் நிலையத்தில் ஆதார் திருத்தம் செய்வதாக பள்ளி மாணவர்கள் புகார் செய்கின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம்இ சின்னாளபட்டியில் அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்றும்இ தனியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகள் 6ம்இ அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் 3ம் அரசு நடுநிலைப் பள்ளி 1ம் செயல்பட்டு வருகிறது. சின்னாளபட்டியைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். மாணவர்கள் ஆதார் திருத்தம்



மற்றும் ஆதார் சேவைகளுக்காக சின்னாளபட்டியில் உள்ள தபால் நிலையத்திற்கு செல்லும் நிலை உள்ளது. இது தவிர திண்டுக்கல்லுக்கும் சென்று ஆதார் திருத்தங்களை செய்து வருகின்றனர். சின்னாளபட்டி தபால் நிலையத்தில் செயல்படும் ஆதார் திருத்த சேவை மையத்தில் தாமதமாக ஆதார் திருத்தம் செய்வதாகவும்இ 20 நாட்களுக்கு முன்பே பதிவு செய்த நபர்களுக்கு மட்டும்தான் ஆதார் திருத்தம் செய்வதாக கூறப்படுகிறது. இது தவிர நாள் ஒன்றுக்கு 5 முதல் 6 பேருக்குத்தான் ஆதார் திருத்தம் நடைபெறுவதால் பள்ளி மாணவர்கள் கடும் சிரமப்படுகின்றனர். 10ம் வகுப்பு பொதுத்தேர்வுக்காக ஆதாரில் திருத்தம் கொடுத்தால் அவற்றை சரி செய்ய முடியாமல் மாணவர்கள் சிரமப்படுகின்றனர். தபால் நிலையத்தில் மணிக்கணக்கில் காத்திருந்தும்இ நெட்ஒர்க் சரியல்லைஇ சாப்ட்வேர் அப்டேட் ஆகவில்லை என அலுவலர்கள் கூறுவதாக மாணவர்கள் குறைகூறுகின்றனர்.

எனவே சின்னாளபட்டியில் உள்ள பள்ளிகளில் ஆதார் திருத்தம் சேவை மைய முகாம் நடத்த வேண்டும் என மாணவர்கள் மாவட்ட நிர்வாத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். மாணவர்களின் புகார்கள் குறித்து சின்னாளபட்டி தபால் நிலைய அலுவலரிடம் கேட்டபோது ஆதார் சம்மந்தமாக சாப்ட்வேர் அப்டேட் செய்துள்ளனர். இதனால் ஆதார் பதிவேற்றம் செய்வது தாமதமாகிறது. மேலும்இ சின்னாளபட்டியில் நெட்ஒர்க்கும் முறையாக கிடைக்காததால் ஆதார் திருத்தப் பணிகள் தாமதமாகிறது என்றனர்.

## உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னிவாடி பேரூராட்சி மன்றத் தலைவர் தனலெட்சுமி சண்முகம் சார்பாக 75 தூய்மை பணியாளர்களுக்கு இனிப்புகளுடன் பிரியாணி வழங்கப்பட்டது

சின்னாளபட்டி, டிச.1-

உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னிவாடி பேரூராட்சி மன்றத் தலைவர் தனலெட்சுமி சண்முகம் சார்பாக பேரூராட்சியில் பணிபுரியும் 75 தூய்மை பணியாளர்களுக்கு இனிப்புகளுடன். பிரியாணி வழங்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், கன்னிவாடி பேரூராட்சி சார்பாக தமிழ்நாடு துணை முதல் அமைச்சரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. பேரூராட்சி அலுவலகத்தில் பேரூராட்சி மன்றத்தலைவர் தனலெட்சுமி சண்முகம் சார்பாக பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் உட்பட



75 நபர்களுக்கு இனிப்புகள் மற்றும் மட்டன் பிரியாணி வழங்கப்பட்டது.

உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா குறித்து பேரூராட்சி மன்றத்தலைவர் தனலெட்சுமி சண்முகம் கூறுகையில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்கள் மற்றும் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலளார் ஐ.பி.செந்தில்குமார் அவர்களின் வழிகாட்டுதலின்படி பேரூராட்சி அலுவலகத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்;டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடி தூய்மை பணியாளர்களுக்கு இனிப்புகள் மற்றும் அசைவ உணவுகளை வழங்கினோம் என்றார். நிகழ்ச்சியில் கன்னிவாடி பேரூர் கழக முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் சண்முகம், அவைத்தலைவர் சர்புதீன், மாணவரணி அமைப்பாளர் சுருளிநாதன், திமுக நிர்வாகி கலையரசன், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் உமாஇந்திராகாந்தி, மகேஸ்வரன், சித்ரா, சரண்யா, கார்த்திகை செல்வி, ஆறுமுகம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ‘காசாவில் இடிந்த கட்டிடங்களில் 10,000+ உடல்கள்...’ உலுக்கும் மீட்பு அனுபவம்



இஸ்ரேல், டிச.01-

இஸ்ரேல் படைகளின் பல்வேறு உக்கிரமான தாக்குதல்களினால் காசாவில் இடிந்து விழுந்த கட்டிட இடிபாடுகளில் 10,000க்கும் அதிகமான உடல்கள் சிக்கியிருக்கின்றன என்றும், அவற்றை மீட்பது சாதாரணக் காரியமல்ல என்றும் காசாவின் குடிமைப் பணியாளர்கள் அளித்துள்ள பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

காசா நகரின் கிழக்குப் பகுதியான அல்சாஹா அருகே செப்டம்பர் 17 அன்று நடந்த பணிதான் நூஹ் அல்ஷக்னோபிக்கு அதிகம் துன்பம் தருகிறது. இஸ்ரேல் படைகள் ஒரு வீட்டை குண்டுவீசி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்டோரை கொன்று குவித்தது. அவர்களில் பெரும்பாலோரின் உடல்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தன.

அல் ஷக்னோபியின் குழு இரண்டு சிறுமிகளின் உடல்களை வெளியே எடுத்ததும் தொடர்ந்து தோண்டினர்; அவர்கள் இடிந்து விழுந்த தரைத் தளங்களின் கீழ் ஊர்ந்து சென்று உடல்களை மீட்க, யாரேனும் உயிருடன் இருந்தால் அவர்களைக் காப்பாற்றவும் கடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நூஹ் அல் ஷக்னோபி ‘இன்டெர்செப்ட்’ ஊடகத்திற்குக் கூறும்போது, “யாரேனும் உயிருடன் இருப்பதாக நம்பிக்கை இருந்தால்தான் கீழே செல்வோம், இல்லையெனில் மேலிருந்து கீழ் நோக்கித் தோண்டுவோம். அதன்பிறகு நாங்கள் கண்டது பயங்கரமானதொரு கனவை விடவும் கொடூரமான நிஜம்” என்றார்.

இடிபாடுகளுக்குள் 12 மீட்டர் அவர்கள் நடந்தனர். இடிபாடுகள் நெடுக உடைந்த கால்கள், கைகள், தாயின் உடல் அதை இறுக அணைத்து இறந்துபோன குழந்தை என்று உடல்கள் அருகே குடிமைப் பணியாளர்கள் ஊர்ந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அனுபவம் குண்டுவீச்சுத் தாக்குதலின் தாக்கத்தை அவர்களுக்கு உணர்த்தியது. இடிபாடுகளின் ஆழத்திலிருந்து ஒரு சிறுமி ‘நான் இங்கே... நான் இங்கே’ என்று ஈனமாக முனகுவதும் அவர்களுக்குக் கேட்டது. அந்தச் சிறுமியைக் காப்பாற்றினர்.

இரண்டு ஆண்டுகள் நீடித்த தாக்குதல்களுக்குப் பிறகு, காசா குடிமைப் பாதுகாப்பு படையில் சுமார் 900 பணியாளர்கள் மட்டுமே உள்ளனர்; அதன் செயல்திறன் 90% குறைந்துவிட்டதாகத் தெரிவித்தனர். கனரக இயந்திரங்கள் இல்லாத சூழலில், அவர்கள் சுத்திகள், கோடரிகள், கரணைகள் போன்ற எளிய கருவிகளையே பயன்படுத்துகின்றனர். ஓர் உடலை மீட்பதற்கே பல நாட்கள் ஆகிறது என்கின்றனர்.

இடிபாடுகளுக்கு இடையில் 10,000க்கும் அதிகமான உடல்கள் கிடக்கலாம் என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்களை இந்த வேதனையான பணியில் ஊக்கப்படுத்துவது என்னவெனில், இடிபாடுகளிலிருந்து ஒரு குரல், ஓர் உயிரின் சத்தம் கேட்டால் போதும் அவரைக் காப்பாற்ற இவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைப்பதே.

24 வயதான அல் ஷக்னோபி ஏற்கெனவே 7 ஆண்டுகளாக காசா குடிமைப் பாதுகாப்பில் பணியாற்றுகிறார். அவரின் வீடு தல்அல் ஹவ்வா பகுதியில் அழிக்கப்பட்டு, குடும்பம் தெற்கில் இடம்பெயர்ந்து வாழ்கிறது. போர் நிறுத்தம் வந்தால் மக்கள் மூச்சு விடலாம் என்கிறார் அல் ஷக்னோபி, ஆனால், இவர்களைப் போன்ற பணியாளர்களுக்கோ போர் முடிந்த பிறகுதான் போரே தொடங்குகிறது. அதாவது உடல்களை மீட்பது.

போரில் இறந்த தன் அத்தையின் உடலும் இந்த 10,000 உடல்களில் ஒன்றாக இருக்கலாம் என்கிறார் ஷக்னோபி. இஸ்ரேல் தாக்குதலில் தீவிரமாக பாதிக்கப்பட்ட ஷுஜாயா, ரஃபா உட்பட பல பகுதிகள் இன்னும் அணுக முடியாதவையாக உள்ளன. இஸ்ரேலி படைகள் அப்பகுதிகளை ‘யெல்லோ ஸோன்’ என்று கூறி மீட்புக்குழுவுக்கு அனுமதி மறுத்துள்ளது.

“இந்த இடைக்கால போர் நிறுத்தத்தின்போது சில உடல்களை மட்டுமே மீட்டோம்,” என்றார் அல் ஷக்னோபி. “எங்களுக்கு இயந்திரங்கள் இல்லை. சில இடங்களில் நூற்றுக்கணக்கானோர் இடிபாடுகளுக்குள் இருப்பதை அறிந்திருந்தும் செல்ல முடியவில்லை” என்றார் அவர்.

இந்த மீட்புப் படையைச் சேர்ந்த மற்றொரு வீரரான 25 வயதான அல் கம்மாஷ் கூறும்போது, குரல் “கேட்கிறது, ஆனால் இடுபாடுகளுக்குள் செல்ல முடியாமல் போய் அவரைக் காப்பாற்ற முடியாமல் போனால் கடும் வேதனைதான் ஏற்படுகிறது” என்றார். “ஒரு பணிக்கு அனுப்பப்பட்டால் அதை நான் முழுமையாக முடிக்க வேண்டும் என்ற பொறுப்பு எனக்குண்டு” என்றார் அவர்.

சுவர் அல்லது மாடியின் கீழ் சிக்கியிருந்தால் ஓர் உடலை மீட்பதற்கே 10 12 மணி நேரங்கள் ஆகும். “சில நேரங்களில் கனரக கருவிகள் தேவைப்படுவதால் மீட்க முடியாமலே கூட போகும்” என்றார்.

இந்த இஸ்ரேலிய தாக்குதல் தன்னை உணர்ச்சியற்ற மரக்கட்டையாகவே மாற்றி விட்டது என்கிறார் அல் ஷக்னோபி, “போரின் தொடக்கத்தில் உடல்களை பார்க்கவே முடியவில்லை. கண்களை மூடிக்கொண்டுதான் உடல்களை மீட்கிறோம். வெள்ளைத் துணிகளில் உடல்களை எடுத்து வந்தோம். அந்த உடல்கள் மிகவும் நொய்மையாகிவிட்டதால் தொடக் கூட மனம் வரவில்லை” என்று வேதனையுடன் கூறுகிறார் ஷக்னோபி.

உடல்கள் பலவிதம்... அழுகிய நிலையில் கிடக்கும், கை, கால் மற்றும் சிதறிய உடல் உறுப்புகள், எரிந்த உடல்கள், எலும்புக் கூடுகள் வெறும் மண்டை ஓடுகள் என்று ஆங்காங்கே இடிபாடுகளில் கிடக்கின்றன. சூரிய ஒளியில் உடல்கள் வேகமாக அழுகுவதால் அருகில் செல்ல முடியாத அளவுக்கு துர்நாற்றம் என்று குடிமைப் படையின் வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

டி.என்.ஏ சோதனைகள் இல்லை என்பதால் உறவினர்கள் உடலை அடையாளம் காண முடியாமல் தவிக்கின்றனர். உடைகள், காலணிகள், மோதிரங்கள், அடையாள அட்டைகள் போன்றவற்றைத்தான் அடையாளமாக பயன்படுத்துகிறார்கள். அடையாளம் தெரியாத உடல்கள் பெயரில்லா கல்லறையில் அடக்கம் செய்யப்படுகின்றன.

குடும்பங்கள் அருகில் காத்திருக்கும்போது, அவர்கள் வெளியே கொண்டுவரும் உடலைக் கண்டு மீளாத துயரம் வெடிக்கிறது. இந்த பணியாளர்கள் தங்கள் சொந்த குடும்பங்களே தாக்குதலால் பாதிக்கப்பட்ட சூழலில் இந்த பயங்கர பணியை செய்து வருகின்றனர்.

இந்தக் கடினமான பணியை எது அவர்களைச் செய்ய உத்வேக மூட்டுகிறது என்றால், உயிருடன் இருப்பவர்களை மீட்கலாம் என்பதே என்கின்றனர் கடினமான வேலையில் ஈடுபட்டுள்ள காசா குடிமைப் பணியினர். இன்னமும் மரணமடைந்தவர்களின் உடலுக்காகவும் இறுதிச் சடங்கு செய்யவும் மக்கள் காத்திருக்கின்றனர்.

மேலும் பலர் காணாமல் போன தங்களது மகனோ, மகளோ, சகோதரனோ, சகோதரியோ எங்கேயோ இருப்பார்கள் என்ற நம்பிக்கையிலும் எங்கிருந்தாவது குடிமை பணியினரால் மீட்டெடுக்கப்பட்டு உயிருடன் திரும்பி வருவார்கள் என்றும் நம்பிக்கையிலும் காசா மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

## எஸ்ஐஆர் பணியை முறையாக நடத்தாத ஆட்சியர் மீது நடவடிக்கை தேவை: அமைச்சர் ஐ.பெரியசாமி

திண்டுக்கல், டிச.01-

எஸ்ஐஆர் பணியை முறையாக நடத்தாத மாவட்ட ஆட்சியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்தார்.

திண்டுக்கல்லில் அமைச்சர் ஐ.பெரியசாமி இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: திண்டுக்கல் மாவட்ட ஆத்தூர் தொகுதியில் எஸ்ஐஆர் பணிகள் அவசரகோலத்தில் நடைபெறுகிறது. வாக்குச் சாவடி நிலை அலுவலர்களை அழைத்து வட்டாட்சியர் முத்துமுருகன், இனி இருக்கும் படிவங்களை, இடம்பெயர்ந்து விட்டார்கள் எனப் பதிவு செய்து முடியுங்கள் என்று வலியுறுத்துவதாக தகவல்கள் வருகிறது.

ஒட்டுப்பட்டியில் மொத்தம் 60 வாக்காளர்களை இடம்பெயர்ந்தாக பதிவு செய்துவிட்டார்கள். குறிப்பாக சின்னாளபட்டி பேரூராட்சியில் 25 ஆயிரம் வாக்குகள் உள்ளது. இதில் 7227 வாக்குகளை இடம்பெயர்வு என முடித்துவிட்டனர். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த தேர்தலில் 17 ஆயிரத்திக்கும் மேல் வாக்குககள் பதிவாகியுள்ளது. ஆனால் நேற்றுவரை 16100 வாக்காளர்கள் தான் பதிவு செய்துள்ளனர்.

அனைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களையும் கட்டாயப்படுத்தி இடம்பெயர்ந்துவிட்டார்கள் என 25 ஆயிரம் வாக்குகளை இல்லாமல் செய்துவிட்டனர். இந்த அநீதி எங்காவது நடக்குமா, மாவட்ட ஆட்சியரும், வட்டாட்சியரும் திட்டமிட்டு ஆத்தூர் தொகுதியில் வாக்காளர்களை நீக்கிவிட்டனர்.

கடந்த இரண்டு தினங்களாக எஸ்ஐஆர் பணி ஆத்தூர் தொகுதியில் நடைபெறவில்லை. ஆத்தூர் தொகுதியில் எஸ்ஐஆர் பணியில் மிகப்பெரிய முறைகேடு நடந்துள்ளது. மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒவ்வாரு வார்டிலும் 250க்கும் மேற்பட்ட வாக்காளர்களை இடம்பெயர்ந்துள்ளனர் எனப் பதிவு செய்துள்ளனர். இவ்வளவு பெரிய தவறு தமிழகத்தில் எங்கும் நடத்திருக்காது.

தேர்தல் ஆணையம் பரிசீலனை செய்து மறு சேர்க்கை நடத்தவேண்டும். மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியருக்கு யார் இந்த அதிகாரம் கொடுத்தது. சின்னாளபட்டி பேரூராட்சியில் 7713 பேரை நீக்கியுள்ளனர்.

எஸ்ஐஆர் பணியை முறையாக நடத்தாத மாவட்ட ஆட்சியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்து விசாரித்து தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கவேண்டும். காலஅவகாசம் இருந்தபோதிலும் மாவட்ட ஆட்சியர் எஸ்ஐஆர் பணியை முடிக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கத்தோடு சட்டத்திற்கு புறம்பாக அவசரகதியில் செயல்பட்டுள்ளார். மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியரை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அமைச்சர் கூறினார்.



## பைக் ஓட்டுநர்களுக்கு ‘முட்டை’ வழங்கி சென்னை போலீஸார் நூதன விழிப்புணர்வு

சென்னை, டிச.01-

இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு முட்டை வழங்கி போக்குவரத்து போலீஸார் நூதன முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அனைவரும் சாலை விதிகளை கடைபிடிக்க வேண்டும், இருசக்கர வாகன ஓட்டிகள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என்பது தொடர்பாக போக்குவரத்து போலீஸார் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில், வேளச்சேரி போக்குவரத்து போலீஸார் நேற்று வேளச்சேரி 100 அடி சாலையில் இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு முட்டை வழங்கி நூதன முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

வேளச்சேரி போக்குவரத்து இணை ஆணையர் அறிவுறுத்தலின் பேரில், போக்குவரத்து காவல் ஆய்வாளர் கதிரவன் தலைமையில், உதவி ஆய்வாளர் அப்துல் மஜீத் உள்ளிட்ட போலீஸார் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். ‘வாகன ஓட்டிகள் மட்டுமின்றி, பின்னால் அமர்ந்திருப்பவரும் கண்டிப்பாக தலைக் கவசம் அணிய வேண்டும். இல்லாவிட்டால் உயிர்ச் சேதம் ஏற்படும்’ என்று அறிவுரை வழங்கினர்.

அப்போது, ஹெல்மெட் அணிந்து வருபவர்களுக்கு ‘முட்டை’ வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். “முட்டைக்கு ஓடு எவ்வளவு முக்கியமோ, அதேபோல, தலைக்கு தலைக் கவசம் அவசியம்” என்பதை போலீஸார் எடுத்துக் கூறினர்.



## பூர்த்தி செய்த எஸ்ஐஆர் படிவம் வழங்க கால அவகாசம் டிச.11 வரை நீட்டிப்பு

சென்னை, டிச.01-

பூர்த்தி செய்யப்பட்ட எஸ்ஐஆர் விண்ணப்பங்களை ஒப்படைக்க டிச.,11ம் தேதி வரை கால அவகாசத்தை நீட்டித்து இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகம், கேரளா, மேற்குவங்கம், சத்தீஸ்கர், கோவா, குஜராத், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், என 9 மாநிலங்கள் மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகள், புதுச்சேரி, லட்சத்தீவு ஆகிய 3 யூனியன் பிரதேசங்களுக்கும் இந்த கால அவகாசம் நீட்டிப்பு பொருந்தும் என தேர்தல் ஆணைய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த 4 ஆம் தேதி முதல் எஸ்.ஐ.ஆர் என்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கின. இந்தப் பணிகளில் தமிழகம் முழுவதும் 68,470 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (பிஎல்ஓ.) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முதல் நாளில் இருந்தே வீடு வீடாகச் சென்று வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கொடுத்து வருகின்றனர்.

ஆனால், தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) பணிகளில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உள்ளது எனக்கூறி திமுக எதிர்ப்பு தெரிவித்து வருவது கவனிக்கத்தக்கது.

இந்நிலையில், பூர்த்தி செய்யப்பட்ட எஸ்ஐஆர் விண்ணப்பங்களை ஒப்படைக்க டிச.,11ம் தேதி வரை கால அவகாசத்தை நீட்டித்து இந்திய தேர்தல் ஆணையம் உத்தவிட்டுள்ளது.

அதாவது, எஸ்ஐஆர் நடைமுறைகள் டிசம்பர் 4 ஆம் தேதியுடன் முடிவடையவிருந்த நிலையில், மேலும் ஒரு வாரம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், வரைவு வாக்காளர் பட்டியல் டிச.16ம் தேதியும், வாக்காளர் இறுதிப் பட்டியல் பிப்.14 ம் தேதியும் வெளியாகும்என அறிவிக்கப்பட்டுளது.



## ஆப்பிரிக்க கெளுத்தி மீன்கள் புனேவில் பறிமுதல்

மும்பை, டிச.01-

ஆப்பிரிக்க கெளுத்தி மீன்கள் நீர் நிலைகளில் பல்லுயிர்ப் பெருக்கத்துக்கும், சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளன. இதனால் இந்த வகை மீன்களை வளர்க்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மகாராஷ்டிர மாநிலம் புனே மாவட்டத்தின் உஜானி அணை அருகேயுள்ள நீர்த்தேக்கத்தில் 2.4 டன் ஆப்பிரிக்க கெளுத்தி மீன்கள் சட்டவிரோதமாக வளர்க்கப்படுவதாக மீன்வளத் துறைக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து மீன்வளத்துறையின் உதவி ஆணையர் அர்ச்சனா ஷிண்டே தலைமையிலான குழு சோதனை கடத்தி அந்த மீன்களை கைப்பற்றி அழித்தனர்.

இந்த மீன்கள் வளர்க்கப்பட்ட நீர்த்தேக்கத்தில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்ற பரிசோதனையும் நடத்தப்பட்டது. அந்த மீன்களை வளர்க்க வேண்டாம் என விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## புதுச்சேரி: மழையால் பாதிக்கப்பட்ட 80,000 பேருக்கு தயாரான உணவு; ஆட்சியர் ஆய்வு

புதுச்சேரி, டிச.01-



மழையால் பாதிக்கப்பட்டோருக்கு சுகாதாரமான உணவைத் தரும் வகையில், 80 ஆயிரம் பேருக்கு லாஸ்பேட்டையில் உள்ள உணவுக் கூடத்தில் உணவு தயாரித்து இன்று விநியோகத்துக்கு அனுப்பப்பட்டது.

டிட்வா புயல் காரணமாக புதுவையில் 3 நாட்களாக கனமழை பெய்து வருகிறது. தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் அருகில் உள்ள பல்வேறு அரசு பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பேரிடர் மேலாண்மை துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பாக அவர்களுக்கு உணவு உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் தங்குவதற்கான அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, லாஸ்பேட்டையில் அமைந்துள்ள அட்சய பாத்திரா உணவு தயாரிக்கும் கூடத்தை இன்று ஆட்சியர் குலோத்துங்கன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அங்கு 80 ஆயிரம் பேருக்கு உணவு தயாரிப்பதை பார்வையிட்ட ஆட்சியர் உணவின் தரத்தையும் சோதித்து பார்த்தார்.

புதுவையில் உள்ள அனைத்து பாதுகாப்பு முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டு உள்ளவர்களுக்கு சரியான நேரத்தில் பாதுகாப்பாகவும், சுத்தமாகவும் உணவு எடுத்துச் செல்லுமாறும் குறிப்பிட்ட நேரத்தில் உணவு பரிமாற நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மதிய வேளைக்கு அந்த உணவை விநியோகிக்கும் வகையில் அவற்றை உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளும் நடந்தன. முகாமில் உள்ளோருக்கு சுத்தமான குடிநீர் உள்ளிட்டவைகளையும் வழங்குமாறும் அறிவுறுத்தினார்.

இதன் தொடர் நிகழ்வாக ஆட்சியர், லாஸ்பேட்டையில் அமைந்துள்ள மாருதி பள்ளி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பழங்குடியின மக்களைப் பார்வையிட்டு அவர்களுக்கு உணவு பரிமாறுவதை ஆய்வு செய்தார். அவர்களிடம் சரியான நேரத்தில் உணவு வழங்கப்படுகிறதா மற்றும் அடிப்படை வசதிகள் உள்ளதா எனக் கேட்டறிந்தார்.

## 2026ம் ஆண்டு மஞ்சப்பை விருதுக்கு விண்ணப்பிக்கவும்: திருவள்ளூர் கலெக்டர் அறிக்கை

திருவள்ளூர், டிச.01-

“மீண்டும் மஞ்சப்பை” பிரசாரத்தை முன்னெடுத்துச்செல்லும் வகையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர், 2022 23ம் நிதியாண்டிற்கான மஞ்சப்பை விருதுகளை சட்டமன்ற கூட்டத்தில் அறிவித்தார்.

இதன்படி, ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகள் மீதான தடையை திறம்பட செயல்படுத்தி, ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கை பைகள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து, மஞ்சப்பை பயன்பாட்டை மீண்டும் உயிர்ப்பித்து, தங்கள் வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மற்றும் சிறந்த 3 பள்ளிகள், 3 கல்லூரிகள் மற்றும் 3 வணிக நிறுவனங்களுக்கு மஞ்சப்பை விருது வழங்கப்பட உள்ளது.



இதன்படி, முதல் பரிசாக ரூ.10 லட்சமும் 2ம் பரிசாக ரூ.5 லட்சமும் 3 ம் பரிசாக ரூ.3 லட்சமும் வழங்கப்பட உள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாக சுற்றுச் சுழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் தங்கள் வளாகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மூலம் தடையை அமல்படுத்துவதற்கும் வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றுவதற்கும் முன்மாதிரியான பங்களிப்பைச் செய்த பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்களுக்கு மஞ்சப்பை விருதுகளை வழங்க முன்மொழிகிறது.

இந்த விருதிற்கு www.tntiruvallu-rawards .com என்ற இணையதளத்தில் மூலம் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். விண்ணப்பங்களில் மென் நகலுடன் 2 அச்சுப் பிரதிகள் மாவட்ட கலெக்டரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், இதற்கான விண்ணப்ப படிவத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய வலைத்தளத்தில் இருந்து www.tnp-cb.gov.in பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்களின் அனைத்து இணைப்புகளிலும் தனிநபர், அமைப்பு தலைவர் முறையாக கையொப்பமிட வேண்டும். விண்ணப்பங்களின் மென் நகலுடன், 2 அச்சுப் பிரதிகள் மாவட்ட கலெக்டரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 15.1.2026. இவ்வாறு திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.



# திருவண்ணாமலை தீபத்திருவிழாவின் 7ம் நாள் அண்ணாமலையார் கோயில் மகா தேரோட்டம் கோலாகலம்

## லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம்

திருவண்ணாமலை, டிச.01-

திருவண்ணாமலை தீபத்திருவிழாவின் 7ம் நாளான இன்றுகாலை பஞ்சமூர்த்திகள் தேரோட்டம் தொடங்கியது. முதலில் விநாயகர் தேர் புறப்பட்டது. இதைத்தொடர்ந்து அடுத்தடுத்து 5 தேர்கள் மாட வீதிகளில் பவனி நடைபெற உள்ளது. லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24ம்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி, நடைபெற்று வருகிறது. தினமும் காலையில் விநாயகர், சந்திரசேகரர், இரவில் பஞ்சமூர்த்திகள் மாட வீதியில் பவனி வந்து அருள்பாலிக்கின்றனர். தீபத்திருவிழாவின் 6ம் நாளான நேற்றிரவு வெள்ளித்தேரோட்டம் நடந்தது. வெள்ளி விமானங்களில் விநாயகர், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், வெள்ளித் தேரில் அண்ணாமலையார் பிரியாவிடை, இந்திர விமானத்தில் உண்ணாமுலை அம்மன், வெள்ளி விமானத்தில் சண்டிகேஸ்வரர் எழுந்தருளி மாடவீதியில் பவனி வந்தனர். அப்போது கொட்டும் மழையில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

விழாவின் 7ம் நாளான இன்று காலை விழாவின் முக்கிய நிகழ்வுகளின் ஒன்றான பஞ்சமூர்த்திகள் தேரோட்டம் தொடங்கியது. முதலில் விநாயகர் தேர், 2வதாக வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் தேர், 3வதாக பெரிய தேர் எனப்படும் அண்ணாமலையார் தேர், 4வதாக உண்ணாமுலையம்மன் தேர், 5வதாக சண்டிகேஸ்வரர் தேர் ஆகியவை புறப்பட்டு மாடவீதியில் பவனி வரும். இதில் ஒரு தேர் மாடவீதியில் பவனி வந்து நிலையை அடைந்தவுடன் மற்றொரு தேர் புறப்படும்.

அதன்படி இன்று காலை 7.10 மணியளவில் முதலாவதாக விநாயகர் தேர் புறப்பட்டது. இதில் விநாயகர் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். ஏராளமான பக்தர்கள் திரண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். தொடர்ந்து, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் தேர் பவனி வந்தது.அதனை தொடர்ந்து பெரிய தேர் எனப்படும் மகா ரதத்தில் அண்ணாமலையார் பிரியாவிடை சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி மாடவீதியில் பவனி வந்தனர். ஏராளமான பக்தர்கள் திரண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். இன்றிரவு உண்ணாமுலையம்மன் தேர் புறப்பாடு நடைபெறும். இந்த தேரை பெண்களே வடம் பிடித்து இழுப்பார்கள். அதனை தொடர்ந்து சண்டிகேஸ்வரர் தேர் வீதி உலா வரும். இன்று நடந்த பஞ்சமூர்த்திகள் தேரோட்டத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டு தேரை வடம் பிடித்து இழுத்து தரிசனம் செய்தனர். தேரோட்டத்தையொட்டி பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

* போலீஸ் கெடுபிடி


திருவண்ணாமலையில் இன்றுகாலை தொடங்கிய தேரோட்டத்தில் போலீசாரின் கெடுபிடி அதிகமாக இருந்தது. மாடவீதியில் இருசக்கர வாகனங்களை கூட போலீசார் அனுமதிக்கவில்லை. அதேபோல் மாடவீதிகளை இணைக்கும், இணைப்பு சாலையிலும் இரும்பு தடுப்புகள் அமைத்து தடை செய்ததால் பக்தர்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

அதேபோல் குழந்தை வரம் கேட்டு வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள், திருவண்ணாமலையில் கரும்பு தொட்டில் கட்டி குழந்தையை உட்கார வைத்து மாடவீதியில் தோளில் சுமந்து சுற்றி வருவது மரபாகும். ஆனால் இன்று கரும்பு தொட்டில் கட்டி வந்த பக்தர்களை மாடவீதியில் போலீசார் அனுமதிக்காமல் வேறு வழியாக திருப்பிவிட்டனர். இதனால் அவர்கள் அதிருப்தி அடைந்தனர்.

# திருவிக.நகர் மண்டலத்தில் டிட்வா புயலில் விழுந்த 3 மரம் வெட்டி அகற்றம்

பெரம்பூர், டிச.01-

டிட்வா புயல் காரணமாக நேற்றிரவு முதல் சென்னையிலும் பல்வேறு இடங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. ஒரு சில இடங்களில் கனமழை பெய்தது. நேற்றிரவு பெய்த கனமழையின் காரணமாக திருவிக. நகர் மண்டலத்துக்கு உட்பட்ட கொளத்தூர் தென்பழனி நகர் எஸ்பிஜ ஏடி எம் அருகே உள்ள



வேப்பமரம் வேரோடு சாய்ந்து விழுந்தது.

இதுபற்றி தகவல் கிடைத்ததும் திருவிக. நகர் மண்டல அதிகாரி சொக்கலிங்கம், செயற் பொறியாளர் சதீஷ்குமார், உதவி பொறியாளர் நந்தகுமார் ஆகியோர் வந்து ஜேசிபி எந்திரம் மூலம் மரத்தை வெட்டி இரவோடு இரவாக அப்புறப்படுத்தி பொதுமக்களுக்கு சிரமமின்றி ஏற்பாடு செய்தனர். இதுபோல், ஓட்டேரி பிரிக்ளின் ரோடு பகுதியில் விழுந்த மரம் உட்பட இரண்டு மரங்கள் உடனடியாக அகற்றப்பட்டு மக்களுக்கு சிரமின்றி ஏற்பாடு செய்தனர். இதனிடையே மரம் சாய்ந்து விழுந்ததில் அந்த பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு கார் சேதம் அடைந்துள்ளதாக தெரிகிறது.

# புதுச்சேரி: சிவப்பு ரேஷன் கார்டுக்கு ரூ.10,000 மழை நிவாரணம் வழங்க அதிமுக வலியுறுத்தல்

புதுச்சேரி, டிச.01-

சிவப்பு நிற ரேஷன் கார்டுக்கு ரூ.10 ஆயிரமும், மஞ்சள் நிற ரேஷன் கார்டுகக்கு ரூ. 5 ஆயிரமும் மழை நிவாரணமாக வழங்க வேண்டும் என்று அதிமுக வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநிலச் செயலாளர் அன்பழகன் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: புதுச்சேரியில் டிட்வா புயலின் தாக்கத்தால் கனமழை பெய்து வருகிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கட்டிட தொழில் புரிவோர், ஆட்டோ ஓட்டுநர்கள், நடைபாதை வியாபாரிகள் உள்ளிட்ட அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர்களும் தொழில்புரிய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் விவசாய விளை நிலங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. 100 நாட்கள் வேலை முழுமையாக நிறுத்தப் பட்டுள்ளது.

ஒரு வாரத்துக்கும் மேலாக மீனவர்கள் மீன்பிடி தொழிலுக்கு செல்லவில்லை. மீன் விற்பனை செய்யும் மீனவப் பெண்கள் தினசரி வருவாய் இன்றி மிகுந்த சிரமத்துக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். புதுச்சேரியில் சுமார்




2 லட்சத்து 8 ஆயிரம் சிவப்பு ரேஷன் கார்டும், 1 லட்சத்து 60 ஆயிரம் மஞ்சள் ரேஷன் கார்டும் வைத்துள்ள குடும்பத்தினர் உள்ளனர்.

தற்போது பெய்து வரும் கனமழையால் பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கு பேரிடர் கால புயல் கனமழை நிவாரணம் அளிக்க வேண்டியது அரசின் கடமையாகும். எனவே முதல்வர் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் சிவப்பு ரேஷன் கார்டு வைத்துள்ள குடும்பத்தினருக்கு ரூ.10 ஆயிரமும், மஞ்சள் நிற கார்டு வைத்துள்ள குடும்பத்தினருக்கு ரூ.5 ஆயிரம் மழைக்கால நிவாரணமாக உடனடியாக வழங்க வேண்டும்.

புதுச்சேரியில் ஏற்கனவே பட்ஜெட்டில் அறிவிக் கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவசாயத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 50 சதவீத நிதியை கூட இதுவரை செலவு செய்யப்படாமல் உள்ளனர். பல துறைகளில் செலவு செய்யப்படாமல் தேவையற்ற முறையில் நிதி முடக்கம் செய்துள்ள நிதியில் இருந்து சுமார் ரூ.300 கோடி அளவில் விடுவித்து மக்களுக்கு நிவாரண உதவியை அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

இது சம்பந்தமாக முதல்வர் அமைச்சரவை கூட்டத்தை உடனடியாக கூட்டி இது சம்பந்தமான அறிவிப்பை வெளியிட வேண்டும்.

மத்திய அரசின் நிதி பங்களிப்புடன் மீனவர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் ஊட்டசத்து உதவியளித்தல் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ரூ.4,500 நிதியை, பெய்து வரும் பெருமழையை கருத்தில் கொண்டு மீனவர்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும்.

கனமழையால் புதுச்சேரி நகர பகுதியில் முழுமையாக சாலைகள் சேதமடைந்து மழை நீர் தேங்கியுள்ளது. நகரப் பகுதியில் புதியதாக செப்பனிடப்பட்ட சாலைகள் தரமற்று இந்த சாதாரண மழைக்கே சேதமடைந்துள்ளது.

பல பகுதிகளில் வடிநீர் வாய்க்கால்கள் இன்னமும் சீரமைக்கப்படாததால், ஆங்காங்கே மின் மோட்டார் முலம் குடியிருப்பு பகுதியில் தேங்கியுள்ள தண்ணீர் வெளியேற்றப்பட்டு கொண்டிருக்கின்றனர்.

சாதாரண மழைக்கே எதிர்கொள்ள முடியாமல் பல குடியிருப்பு பகுதிகள் தேங்கியுள்ள நீரால் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை நீர் வடிகால் விஷயத்தில் ஆளும் அரசு முழுமையாக தோல்வியடைந்துள்ளது. அரசிடம் இது சம்பந்தமாக தொலைநோக்கு சிந்தனை இல்லாதது தவறான ஒன்றாகும். நீர்நிலை, கழிவு நீர் வடிகால் வாய்க்கால்களின் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அரசு அகற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



# டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு துணை நிற்க தயார்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, டிச.01-

“டிட்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்குத் துணை நிற்க தமிழ்நாடு தயாராக உள்ளது” என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “டிட்வா புயல் காரணமாக நமது அண்டை நாடான இலங்கை பேரழிவைச் சந்தித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தும் பல இடங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியும் இலங்கை மக்கள் அவதியுறுகின்றனர்.

இந்த இயற்கைச் சீற்றத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கை மக்களின் இப்பெருந்துயரில் தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் பங்கெடுக்கிறோம்.

இலங்கையில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளை மீட்க அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு, இன்று காலை 11:05 மணியளவில் முதற்கட்டமாக 177 பேர் (ஆண்கள் 113, பெண்கள் 60, குழந்தைகள் 4) தமிழ்நாட்டிற்குத் திரும்ப அழைத்து வரப்பட்டுள்ளனர்.

டிட்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு ஒன்றிய அரசின் மூலம் உணவுப் பொருட்கள் மருந்துப் பொருட்கள் உள்ளிட்டவற்றைத் தந்து, அவர்கள் மீண்டெழுந்திட உதவிக்கரம் நீட்டிடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. இதற்காக ஒன்றிய அரசுடன் இணைந்து செயல்பட அதிகாரிகள் குழுவை அமைத்திடத் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.


# 2ம் வகுப்பு பெட்டிகளிலும் தலையணை, போர்வை: ஜன.1 முதல் 10 ரயில்களில் தெற்கு ரயில்வே அறிமுகம்

சென்னை, டிச.01-

ரயில்களில் 2ம் வகுப்பு தூங்கும் வசதி கொண்ட பெட்டிகளில் பயணிப்பவர்கள் கட்டண அடிப்படையில் தலையணை, போர்வை பெற்றுக் கொள்ளும் வசதி ஜன.1ம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

நீண்டதூர பயணத்துக்கு ரயில் போக்குவரத்தையே மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். விரைவான, பாதுகாப்பான பயணம், கட்டணம் குறைவு போன்ற காரணங்களால் ரயில்களில் பயணிப்போர் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகிறது. விரைவு ரயில்களை பொருத்தவரை, ஏ.சி. பெட்டிகளில் பயணம் செய்பவர்களுக்கு மட்டுமே போர்வை, தலையணை வழங்கப்படுகிறது.

இதற்கிடையே, 2ம் வகுப்பு தூங்கும் வசதி கொண்ட பெட்டிகளில் பயணம் செய்பவர்களுக்கும் போர்வை, தலையணை வழங்க வேண்டும் என்று பயணிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். இதுகுறித்து தீவிர ஆலோசனை நடத்தப்பட்டது.



இந்நிலையில், 2ம் வகுப்பு தூங்கும் வசதி கொண்ட பெட்டிகளில் கட்டணம் செலுத்தி போர்வை, தலையணை பெற்றுக் கொள்ளும் வசதியை சென்னை கோட்டத்தில் தெற்கு ரயில்வே அறிமுகம் செய்துள்ளது. முதல் கட்டமாக, சென்னையில் இருந்து செல்லும் நீலகிரி, மங்களூரு, திருச்செந்தூர், சிலம்பு, திருவனந்தபுரம், ஆலப்புழா அதிவிரைவு ரயில்கள், மன்னார்குடி, பாலக்காடு, மங்களூரு விரைவு ரயில்கள், தாம்பரம் நாகர்கோவில் அதி விரைவு ரயில் ஆகிய 10 ரயில்களில் 2026 ஜனவரி 1ம் தேதி முதல் இத்திட்டம் நடைமுறைக்கு வர உள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் தலையணை மட்டும் பெற ரூ.30, போர்வை மட்டும் பெற ரூ.20, இரண்டையும் பெற ரூ.50 கட்டணமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. பயணிகள் தங்களுக்கு தேவையானதை ரயில் பெட்டிகளில் உள்ள ஊழியர்களிடம் க்யூஆர் குறியீடு மூலம் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். போர்வைகளை கொள்முதல் செய்வது, ரயிலில் ஏற்றி விநியோகம் செய்வது, தொடர்ந்து சுத்தம் செய்வது ஆகிய பணிகளை ரயில்வே ஒப்பந்ததாரர் மேற்கொள்வார். இந்த 10 ரயில்களில் அடுத்த 3 ஆண்டுகளுக்கு இந்த திட்டம் நடைமுறையில் இருக்கும்.

இதுகுறித்து சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியபோது, ‘‘சென்னை ரயில்வே கோட்டம் கடந்த 202324ம் ஆண்டில் கட்டணமில்லா வருவாய் திட்டத்தின்கீழ் ஒரு முன்னோடி திட்டத்தை செயல்படுத்தியது. இதற்கு பயணிகளிடம் அமோக வரவேற்பு கிடைத்ததால், ரயில்வே நிர்வாகம் இதை ஒரு நிரந்தர ‘கட்டணமில்லா வருவாய் திட்டமாக அறிமுகம் செய்கிறது. இதனால், பயணிகளின் வசதி மேம்படுத்தப்படும். ரயில்வேக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும். இதன்மூலம் ரயில்வேக்கு உரிமைக் கட்டணமாக ஆண்டுக்கு ரூ.28.28 லட்சம் கிடைக்கும்’’ என்றனர்.

# “அன்புமணியின் அரசியல் பயணம் இதோடு முடிந்து விட்டது..!” ராமதாஸ் ஆவேச பேச்சு

சென்னை, டிச.01-

அன்புமணி தான் பாமக தலைவர் என்ற தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பை எதிர்த்து டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸ் அவரது மகன் அன்புமணி இடையேயான மோதல் தீவிரமடைந்து வருகிறது. இதற்கிடையே, 2026ம் ஆண்டுஆகஸ்ட் வரை கட்சியின் தலைவராக அன்புமணி தொடர்வார். பாமக சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ‘ஏ’ மற்றும் ‘பி’ படிவங்களில் கையெழுத்திடும் அதிகாரமும் அவருக்குத்தான் உள்ளது என தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் அறிவித்தது.

இந்நிலையில், கடலூர் மாவட்டத்தின் ஒருங்கிணைந்த பாமக பொதுக் குழு கூட்டம் வடலூரில் உள்ள தனியார் திருமண மண்டபம் ஒன்றில் நேற்று நடைபெற்றது. பாமக நிறுவனர் ராமதாஸ், செயல் தலைவர் காந்தி ராமதாஸ், பாமக சட்டப்பேரவை கொறடா மற்றும் பாமக இணைப் பொதுச் செயலாளர் அருள் எம்எல்ஏ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ராமதாஸ் பேசியதாவது: ‘எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்னைப் போல் இருப்பான்’ என்று எண்ணினேன். ஆனால், எனக்கு ஒரு மகன் பிறந்தார். அவர் என்னிடம் இருந்து என் உயிரை மட்டும்தான் பறிக்கவில்லை. நான் சிந்திய வியர்வை எல்லாவற்றையும் பறித்து விட்டார். இருந்தாலும் என்னிடமிருந்து என் உரிமையை மட்டும் பறிக்க முடியாது.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு தொடர்பாக டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு வருகிற திங்கள்கிழமை விசாரணைக்கு வரும். உண்மை தான் வெற்றிபெறும். எந்த நீதிமன்றத்திற்கு சென்றாலும் ராமதாஸை வீழ்த்த முடியாது. உச்ச நீதிமன்றம் சென்றாலும் என் உரிமையை பறிக்க முடியாது. நீதிமன்றம் மீது நம்பிக்கை உள்ளது.

“அன்புமணியின் அரசியல் பயணம் இதோடு முடிந்து விட்டது..!” ராமதாஸ் ஆவேச பேச்சு

காரைக்குடி வேட்பாளர் சஸ்பென்ஸ்... தனக்காக ரிசர்வ் செய்திருக்கிறாரா சீமான்?




46 ஆண்டுகள் 96 ஆயிரம் கிராமங்கள் என் மக்களிடம் சென்று நான் வளர்த்த கட்சியை முழுவதும் அபகரிக்க முயற்சிக்கிறார். அப்படி உழைத்து தான் இந்தக் கட்சியின் தலைவராக ஆகியிருக்கிறேன்; எனக்கு உதவியாக செயல் தலைவராக எனது மகள் ஸ்ரீகாந்தியை நியமித்துள்ளேன்.

கடந்த 28.05.2022 அன்று திருவேற்காட்டில் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்புமணியின் தலைவர் பதவிக்காலம் முடிந்து விட்டது. ‘பணம் பத்தும் செய்யும்’ என்பார்கள்; என்னுடன் இருந்தவர்களை விலைக்கு வாங்கி விட்டார். இருந்தாலும் ஜெயிக்கப் போவது இந்த ராமதாஸ் தான். நான் மக்களிடம் சென்று ஓட்டு கேட்டபோது, ‘ஓட்டு ஒன்று போடுங்க; கட்சியின் வளர்ச்சிக்காக ஒரு ரூபாய் நோட்டு ஒன்று கொடுங்க’ என்று கேட்டு வளர்த்த கட்சி இது. என்னுடைய உரிமையையும் உழைப்பையும் யாராலும் திருட முடியாது. இது போன்று தானாக விரும்பி வரும் ஒரு கூட்டத்தை உங்களால் கூட்ட முடியுமா? ஒவ்வொரு கூட்டத்துக்கும் ரூ.25 லட்சத்தை முன்கூட்டியே கொடுத் துதான் உங்களால் கூட்டத்தைக் கூட்ட முடிகி றது. நான் செய்த பெரிய தவறு என்னவென்றால் அன்புமணியை படிக்க வைத்து டாக்டர், மத்திய மந்திரி, கட்சியின் தலைவராக நியமித்ததுதான்.

நான் மருத்துவமனையில் இருந்தபோது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் வந்து நலம் விசாரித்தனர். அன்புமணி மட்டும், கீழே உள்ள மருத்துவரிடம் நலம் விசாரித்துவிட்டு சென்று விட்டார். மக்களை ஏமாற்ற முடியாது. நீதி, நியாயம் வெற்றி பெறும். என் பக்கம் நியாயம் உள்ளது. மக்கள் என்னுடன் உள்ளனர்.

நான் வயிறு எரிந்து சொல்கிறேன்; அன்புமணியின் அரசியல் பயணம் இதோடு முடிந்து விட்டது. இனிமேல்தான், பாட்டாளி மக்கள் கட்சி இன்னும் வளர்ச்சி அடையப் போகிறது.

2026ம் ஆண்டு கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து ஏராளமான சட்டப்பேரவை உறுப்பி னர்களை உருவாக்கி, அவர்களில் சிலரை அமைச்சராக உருவாக்குவேன். இதற்கு நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து செயல்பட வேண்டும் என்று ஆவேசமாகப் பேசினார் ராமதாஸ்.

இக்கூட்டத்தில் பேசிய வன்னியர் சங்கத் தலைவர் புதா அருள்மொழி, “முன்பே ராமதாஸால் அறிவிக்கப்பட்டது போல, வரும் டிச. 12ம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் இடஒதுக்கீடு போராட்டம் நடைபெறும்” என்று தெரி வித்தார்.

# வட தமிழக கடலோர பகுதிகளுக்கு இணையாக நகரும் டிட்வா புயல்: எங்கெல்லாம் ரெட், ஆரஞ்சு அலர்ட்?

சென்னை, டிச.01-

வங்கக் கடலில் நிலவும் டிட்வா புயல், வட தமிழக கடலோர பகுதிகளுக்கு இணையாக நகர்ந்து வருகிறது. இதன் காரணமாக இன்று (நவ.30) திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டையில் அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. நாளை (டிச.1) திருவள்ளூர் மாவட்டத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடதமிழகம் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில், சென்னைக்கு தென்கிழக்கே 180 கிமீ தொலைவில் டிட்வா புயல் நிலை கொண்டிருந்தது. அப்பொழுது, புயலுக்கும், வடதமிழக கடற்கரைக்குமான குறைந்தபட்ச தூரம் 70 கிமீ ஆக இருந்தது. இது வடதமிழக கடலோர பகுதிகளுக்கு இணையாக வட திசையில் நகரக்கூடும். அவ்வாறு நகரும்போது வட தமிழக கடற்கரையிலிருந்து, குறைந்தபட்ச தூரமானது, 30 கிமீ ஆக இருக்கக்கூடும்.

இதன் காரணமாக இன்று (நவ.30), வட தமிழகத்தில் அநேக இடங்களிலும், தென் தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ரெட் அலர்ட்: இன்று (நவ.30) திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டையில் ஒருசில இடங்களிலும் கன முதல் மிக கனமழையும் ஒரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும்.

ஆரஞ்சு அலர்ட்: இன்று (நவ.30) சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும்,திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஒரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

நாளையும், நாளை மறுதினமும் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை (டிச1.) திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. டிசம்பர் 3 முதல் 6ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வட தமிழகம் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில். தென் தமிழக கடலோரப்பகுதிகள், குமரிக்கடல், மன்னார் வளைகுடா பகுதிகள் மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று அதிகபட்சமாக 65 கிமீ வேகத்தில் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகம், புதுச்சேரியில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக காரைக்காலில் 19 செமீ, மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவிலில் 17 செமீ, நாகப்பட்டினம், மயிலாடுதுறையில் தலா 15 செமீ, திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தலா 14 செமீ, ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம், நாகப்பட்டினம் மாவட்டம் திருப்பூண்டி, தொண்டி, தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் 13 செமீ, கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு, திருவாரூர் மாவட்டம் நன்னிலம், நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரை, வேளாங்கண்ணி, வேதாரண்யத்தில் தலா 12 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# கொளத்தூரில் 246 மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் திட்ட பணியை முடித்த 'முல்லை' இயந்திரம்

சென்னை, டிச.01-

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 5வது வழித்தடத்தில் கொளத்தூர் சாய்வு தளத்திலிருந்து கொளத்தூர் நிலையம் வரை கீழ் பாதையில் 246 மீட்டர் தொலைவுக்கு 'முல்லை' என்ற சுரங்கம் தோண்டும் இயந்திரம் பணியை வெற்றிகரமாக நிறைவு செய்தது. இதற்கிடையே, கொளத்தூர் நிலையம் ஸ்ரீனிவாசா நகர் வரை 1,060 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் அமைக்கும் பணியை 'குறிஞ்சி' இயந்திரம் தொடங்கியது.





சென்னையில், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் ரூ.63,246 கோடி மதிப்பில், 116.1 கி.மீ. தொலைவுக்கு 3 வழித்தடங்களில் செயல்படுத்தப் படுகிறது. இவற்றில், மாதவரம் சோழிங்க நல்லூர் வரையிலான 5வது வழித்தடம் முக்கியமானதாகும். 5 சுரங்கப்பாதை மெட்ரோ ரயில் நிலையங்களும், 39 உயர்மட்ட மெட்ரோ ரயில் நிலையங்களும் இத்தடத்தில் அமைக்கப்படுகின்றன.

இத்தடத்தில் சுரங்கப் பாதை பணிக்கு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலங்களின் பெயர்களைக் கொண்ட சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, கொளத்தூர் சாய்வுதளத்தில் இருந்து கொளத்தூர் நிலையம் வரை 247 மீட்டர் நீளத்துக்கு குறிஞ்சி என்ற சுரங்கம் தோண்டும் இயந்திரம் மூலமாக, சுரங்கப்பாதை அமைக்கும் பணி கடந்த பிப்.18ம் தேதி தொடங்கி ஆகஸ்டில் நிறைவடைந்தது.

அதைத்தொடர்ந்து, கொளத்தூர் சாய்வு தளத்தில் இருந்து கொளத்தூர் நிலையம் வரை 246 மீட்டருக்கு கீழ்பாதை (இரண்டாவது பாதை) அமைக்கும் பணியை 'முல்லை' என்ற சுரங்கம் தோண்டும் இயந்திரம் மே 23ம் தேதி பணியை தொடங்கியது. இந்த இயந்திரம் பணியை முடித்து, கொளத்தூர் நிலையத்தை நேற்று வெற்றிகரமாக வந்தடைந்தது.

அப்போது, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், தலைமை பொது மேலாளர் டி.லிவிங்ஸ்டோன் எலியாசர், (திட்ட திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), இணை பொது மேலாளர் எம்.கார்த்திகேயன் உள்பட பலர் உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

இதுதொடர்பாக, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: சுரங்கம் தோண்டும் இயந்திரமான 'முல்லை', 1.8 மீட்டர் மிகக் குறைந்த சுமை, 3.8 சதவீதம் செங்குத்தான சாய்வு மற்றும் அதிக போக்குவரத்துக்கு உட்பட்ட உள்வட்டச் சாலையின் நடுவில் தரைப் பாதுகாப்புக்கான தேவை போன்ற அனைத்து சவால்களையும் கடந்து எந்தவித இடையூறும் இல்லாமல் சுரங்கப்பாதை பணியை நிறைவு செய்துள்ளது.

அதேபோல், 'குறிஞ்சி' சுரங்கம் தோண்டும் இயந்திரம், கொளத்தூர் நிலையம் முதல் ஸ்ரீனிவாசா நகர் வரை 1,060 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் அமைக்கும் பணியை தொடங்கியுள்ளது. இந்த இயந்திரம் கடினமான பாறைகள் மற்றும் 230 மீட்டர் நீளத்துக்கு வளைவுகளையும் கடந்து செல்லும்.

கொளத்தூர் மெட்ரோவில் ஒரேநேரத்தில், ஒரு சுரங்கம் தோண்டும் இயந்திரம் (குறிஞ்சி) பணியைத் தொடங்கியிருப்பதும், மற்றொன்று (முல்லை) பணியை முடித்து வெளியே வந்திருப்பதும் நம் நாட்டில் இதுவே முதல் முறையாகும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# துண்டை மாற்றியதால், அவர் கருத்து மாறிப்போச்சு: செங்கோட்டையன் குறித்து கோபிசெட்டிபாளையத்தில் இபிஎஸ் விமர்சனம்

ஈரோடு, டிச.01-

கோபிசெட்டிபாளையத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். கோபிசெட்டிபாளையம் அதிமுகவின் கோட்டையாக கருதப்பட்டு வந்தது. இந்த கோட்டையின் தளபதியாக இருந்த அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், சமீபத்தில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார்.

இணைந்தவர், நேற்று கோபிசெட்டிபாளையத்தில் பிரச்சாரம் மேற்கொண்டார். அவருக்கு பலமான வரவேற்பு இருந்தது. இந்நிலையில், இன்று கோபியில் எடப்பாடி கே.பழனிசாமி பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவருக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரச்சாரக்கூட்டத்தில் எடப்பாடி பேசியதாவது, "இந்த தொகுதியில் வெற்றி பெற வேண்டும் என்று யார் யாரோ கனவு காண்கிறார்கள்.

ஆனால் இது அதிமுக வின் கோட்டை. கோபிச்செட்டி பாளையத்தில் அதிமுக வேட்பாளர் அதிக வாக் குகள் பெற்று வெற்றி பெறு வார். வாக்குகளை கேட்க வீடு வீடாக வந்தவர், ராஜினாமா செய்ய மக்களிடம் அனுமதி கேட்டாரா?" கிட்டதட்ட 2,3 ஆண்டு காலமாக இயக்கத்திற்குள் இருந்துகொண்டே இயக்கத்திற்கு எதிராக செயல்பட்டார்.

அதனால்தான் நீக்கப்பட்டார்" மாற்றுக்கட்சி க்கு போய் இருக்கிறார்; போனவர் சும்மா இருந்தால் பரவாயில்லை; தூய்மையான ஆட்சியை கொடுப்போம் என்கிறார்; எம்ஜிஆர், ஜெயலலிதா, நான் முதலமைச்சராக இருந்த போது செங்கோட்டையன் அமைச்சராக இருந்தார்; அப்போது நாங்கள் தூய்மையான ஆட்சி கொடுக்கலையா? துண்டை மாற்றியதால், அவர் கருத்து மாறிப்போச்சு என செங்கோட்டையன் குறித்து எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்துள்ளார்.



# திருப்பத்தூர் அருகே 2 அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து: 9 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழப்பு

திருப்பத்தூர், டிச.01-

திருப்பத்தூர் அருகே 2 அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 9 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியிலிருந்து திண்டுக்கல்லுக்கு அரசுப் பேருந்து சென்றது. அதேசமயத்தில் திருப்பூரிலிருந்து காரைக்குடிக்கு மற்றொரு அரசுப் பேருந்து வந்தது.

இரு பேருந்துகளும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே வைரவன்பட்டி சமத்துவபுரம் பகுதியில் இன்று மாலை 4.20 மணிக்கு சென்றபோது நேருக்கு, நேர் மோதின.

இதில் சம்பவ இடத்திலேயே 9 பெண்கள் மற்றும் ஓட்டுநர் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அவர்களை அவ்வழியாக வந்தோர் மீட்டு 108 ஆம்புலன்ஸ்கள் மூலம் திருப்பத்தூர், காரைக்குடி அரசு மருத்துவமனைகளில் அனுமதித்தனர். சம்பவ இடத்தை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி பார்வையிட்டார்.

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் காயமடைந்தோருக்கு ஆறுதல் கூறினார். இதுகுறித்து நாச்சியாபுரம் போலீஸார் விசாரிக்கின்றனர். மேலும் இந்த கோர விபத்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதையடுத்து வாகனங்கள் மாற்று வழித்தடத்தில் திருப்பிவிடப்பட்டன.

முதல்கட்ட விசாரணையில், திண்டுக்கல் சென்ற அரசுப் பேருந்து அதிவேகமாக சென்றதால், இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.



# திருவையாறில் தியாகராஜர் சுவாமிகளின் 179வது ஆராதனை விழா பந்தல்கால் முகூர்த்தம்

தஞ்சாவூர், டிச.01-

திருவையாறு தியாகராஜ சுவாமிகளின் 179 ஆவது ஆராதனை விழாவுக்கான பந்தக்கால் முகூர்த்தம் இன்று காலை நடைபெற்றது.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜ சுவாமிகள் திருவையாறில் முக்தி அடைந்தார். இவர் பகுல பஞ்சமி தினத்தில் முக்தி அடைந்ததால் அன்றைய தினத்தில் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு 179வது ஆண்டான தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழா வரும் ஜனவரி 3ம் தேதி தொடங்கி 7ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இதையொட்டி பந்தக்கால் முகூர்த்தம் இன்று தியாகராஜ சுவாமிகளின் சமாதி அருகே காவிரி ஆற்றங்கரையில் நடைபெற்றது. இதில் அறங்காவலர்கள் சுரேஷ் மூப்பனார், டெக்கான் என்கே மூர்த்தி, பொருளாளர் ஆர் கணேஷ், உதவி செயலாளர்கள் கே.என். ராஜகோபாலன் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து அறங்காவலர் சுரேஷ் மூப்பனார் கூறியதாவது: திருவையாறில் ஆண்டுதோறும் தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி இந்த வருடம் 179வது ஆராதனை விழா வருகிற ஜனவரி 3ம் தேதி தொடங்கி 7ம் தேதி வரை திருவையாறு நடைபெற உள்ளது.

இதில் உலகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு 7ம் தேதி பஞ்சரத்ன கீர்த்தனைகளை ஒரே நேரத்தில் இசைத்து இசை அஞ்சலி செலுத்த உள்ளனர்.

இந்த விழா ஜனவரி 3ம் தேதி மாலை 4.30 மணிக்கு மங்கல இசையுடன் தொடங்குகிறது. விழாவுக்கு சபாவின் தலைவர் ஜிகே வாசன் தலைமை வகிக்க உள்ளார். இதில் சிறப்பு விருந்தினராக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் பங்கேற்க உள்ளார். அன்றைய தினம் இரவு தேசிய நிகழ்ச்சிகள் 9.30 மணி முதல் 11 மணி வரை நேரலையாக ஒளிபரப்பப்பட உள்ளது.

தொடர்ந்து நாள்தோறும் காலை முதல் இரவு வரை பல்வேறு இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு தியாகராஜருக்கு இசை அஞ்சலி செலுத்த உள்ளனர். விழாவுக்கான ஏற்பாடுகளை சபாவின் அறங்காவலர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் இணைந்து செய்து வருகின்றனர்.

# முழு கொள்ளளவை எட்டும் செம்பரம்பாக்கம் ஏரி; பூண்டி ஏரியில் 4,000 கனஅடி நீர் வெளியேற்றம்

சென்னை, டிச.01-

புயல் எச்சரிக்கையையொட்டி ஏற்கெனவே முழு கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து விநாடிக்கு 2,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. பூண்டி ஏரியிலிருந்து 4,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.



புயல் எச்சரிக்கையையொட்டி, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் முக்கிய ஆதாரங்களில் ஒன்றான செம்பரம்பாக்கம் ஏரி கிட்டத்தட்ட முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தொடர்ந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த நீர்மட்டம் 24 அடியில் 21.73 அடியாக உள்ளது. மொத்த கொள்ளளவான 3.645 டி.எம்.சி. அளவில், தற்போது 3.048 டி.எம்.சி. நீர் இருப்பு உள்ளது.

ஏரிக்கு தற்போது நீர்வரத்து விநாடிக்கு 100 கன அடியாக மட்டுமே இருக்கும் நிலையில், பாதுகாப்பு கருதி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு அதிகப்படுத்தப்பட்டது. காலையில் மொத்தமாக 1,394 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. இதில், உபரிநீராக 1,200 கனஅடி நீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டது. சென்னை குடிநீர்த் தேவைக்காக 165 கன அடியும், சிப்காட் பயன்பாட்டுக்கு 4 கனஅடியும் நீர் திறந்துவிடப்படுகிறது. இந்த 1,200 கனஅடி நீர் இரவு 2 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

கடந்த 24 மணி நேரத்தில் (காலை 6 மணி வரை) ஏரிப் பகுதியில் மழைப்பொழிவு எதுவும் இல்லை. இருப்பினும், கனமழைக்கான ஆரஞ்சு அலர்ட் எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டு, நீர்பாசனத் துறையினர் ஏரியின் நீர் இருப்பை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்.

முழு கொள்ளளவை எட்டும் செம்பரம்பாக்கம் ஏரி; பூண்டி ஏரியில் 4,000 கனஅடி நீர் வெளியேற்றம்

டிட்வா புயல் தாக்கம்: வயல்கள், குடியிருப்புகளை சூழ்ந்த மழைநீர் - டெல்டா மாவட்டங்களின் நிலவரம் என்ன?

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நவ.29,30 ஆகிய தேதி கனில் மாவட்டத்தில் மிகக் கனமழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், பேரிடரை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகமும், நெடுஞ்சாலைத் துறையும் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறை ஊழியர்கள் 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ளனர். இதற்காக, 4 ஜே.சி.பி. இயந் திரங்கள், 10 மரம் அறுக்கும் கருவிகள், மண்வெட்டிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்கு பருவமழை தொடங்கியது முதல் திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது. டிட்வா புயல் காரணமாக இன்று திருவள்ளூர் மாவட்டத்தில் மிக கனமழைக் கான ஆரஞ்சு எச்சரிக்கையும், ஒரு சில பகுதிகளில் அதிக னமழைக்கான சிவப்பு எச்சரிக்கையும் விடுத்துள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்த்தேக்கங்களில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

நேற்று மாலை நிலவரப்படி பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து விநாடிக்கு 4,000 கன அடி வீதம் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும் புழல் ஏரியிலிருந்து விநாடிக்கு 1,500 கன அடி, வீதம் உபரி நீர் வெளி யேற்றப்பட்டு வருகிறது.

பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து உபரிநீர் வெளியேறும் கொசஸ்தலையாறு செல்லும் கிராமங்களான நம்பாக்கம், கிருஷ்ணாபுரம், ஆட்ரம்பாக்கம், ஒதப்பை, நெய்வேலி, எறையூர், பீமன்தோப்பு. கொரக்க ந்தண்டலம், சோமதேவன்பட்டு, மெய்யூர், வெள்ளியூர், தாமரைப்பாக்கம். திருக்கண்டலம், ஆத்தூர். பண்டிக்காவனூர், ஜெகநாத புரம். புதுகுப்பம். கன்னிப் பாளை யம், வன்னிப்பாக்கம், அருஙன் பாளையம், மடியூர். சீமாவரம். வெள்ளிவாயல்சாவடி, நாப்பாளையம், இடையான்சாவடி. மணலி, மணலி புதுநகர் சடையான்குப்பம். எண்ணூர் பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# புதுச்சேரி: டிட்வா புயலால் நோணாங்குப்பம் படகு சவாரி நிறுத்தம்

புதுச்சேரி, டிச.01-

டிட்வா புயலால் நோணாங்குப்பம் சுண்ணாம்பாற்றில் படகு குழாம் மறு அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டுள்ளது. மேலும், படகு சவாரியும் நிறுத்தப்பட்டுள்ளது.



புதுச்சேரியை அடுத்த நோணாங்குப்பம் சுண்ணாம்பாற்றில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் படகு குழாம் செயல்பட்டு வருகிறது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் சுண்ணாம்பாற்றில் பயணித்து பேரடைஸ் பீச்சுக்கு சென்று மகிழ்ந்து மீண்டும் படகில் பயணித்து வந்து படகு குழாமுக்கு திரும்புவது மறக்க முடியாத அனுபவம்.

இதனால் வாரந்தோறும் சனி, ஞாயிறு மட்டுமின்றி விடுமுறை தினங்களிலும் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகளவில் இருக்கும். இந்நிலையில் டிட்வா புயலால் கடந்த 3 நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் நோணாங்குப்பம் சுண்ணாம்பாற்றின் படுகை அணை நிரம்பி வழிவதோடு, கடலை நோக்கி தண்ணீர் ஆர்ப்பரித்து செல்கிறது. கடலும் ஆர்ப்பரித்து காணப்படுகிறது.

ஆகவே பாதுகாப்பு கருதி நோணாங்குப்பம் படகு குழாமில் படகு சவாரி நிறுத்தப்பட்டு, படகுகள் கரைகளில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக படகு இல்லமும் மூடப்பட்டுள்ளது. மறு அறிவிப்பு வரும் வரை படகு குழாம் மூடப்படுவதாக தகவல் தெரிவித்துள்ளனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000